*2024 பிப்ரவரி 22]*

*முடியுமே தவிர, நான்குவழிச் சாலைக்கும் நிதியைச் செலவு செய்துவிட்டு—பின்னர் நில எடுப்பிற்கும் ரூ.60 கோடி கொடுத்து புறவழிச்சாலை அமைப்பதற்கு நிலத்தை கையகப்படுத்த செல்கிறபோது, டவுன் உள்ளே செல்வதற்கு ஆட்கள் இல்லாமல் ஆகிவிடும். பேருந்துகளில் செல்வதற்கும் ஆட்கள் இல்லாமல் ஆகிவிடும். பின்னர், அனைத்து வாகனங்களும் வேறு வழியில் சென்றுவிடும். ஆகையினால் நான்குவழிச் சாலைக்கான பணிகள் அனைத்தும் முடிந்தவுடனே, போக்குவரத்துச் செறிவைக் கணக்கீடு செய்துவிட்டு, ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதியில் நில எடுப்பு செய்து, கட்டாயம் பணியைச் செய்வோம். ஆகவே, முதலில் போக்குவரத்துச் செறிவை முடிவு செய்துவிட்டு, பின்னர்* G.O. *வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**43—**

## நியாய விலைக் கடை

***50245—திரு. ஒய். பிரகாஷ்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒசூர் தொகுதி, ஒசூர் ஒன்றியம், படுதேப்பள்ளி ஊராட்சி, கனிமங்கலம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், டி.கே.81, சென்னசத்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள படுதேப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து கனிமங்கலம் கிராமத்திற்கு*

பகுதிநேர நியாய விலைக் கடை விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் ஒன்றியம், படுதேப்பள்ளி ஊராட்சியில் கனிமங்கலம் கிராமம் உள்ளது. அங்கு 200–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தக் கிராம மக்கள் ரேஷன் பொருட்களை வாங்க வேண்டுமென்று சொன்னால், 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சத்தியமங்கலம் கிராமத்திற்குச் சென்று வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படுதேப்பள்ளி கிராம முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து பிரிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, உடனடியாக நியாய விலைக் கடையைப் பிரித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கக்கூடிய கோரிக்கை ஒரு நியாயமான கோரிக்கை என்பதால் துறையின் அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான முழுமையான அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. அங்கு 120 கார்டுகள்தான் இருக்கின்றன. ஏற்கெனவே படுதேப்பள்ளி ஊராட்சியில் முழுநேர நியாய விலைக் கடை இருக்கிறது. அதுபோக, தேவிசெட்டிப்பள்ளியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கனிமங்கலத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கனிமங்கலம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது நியாயமான கோரிக்கையாகக் கருதப்படுகிறது. அதற்குக் காரணம்

*2024 பிப்ரவரி 22]*

*என்னவென்றால், தென்பெண்ணையாற்றைக் கடந்து குறுக்கே செல்ல வேண்டுமென்றால், 3+3=6 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. மழைக் காலங்களில் 11+11=22 கிலோ மீட்டர் தூரம் சுற்றி சென்று வர வேண்டியிருக்கிறது. ஆகவே, 120 குடும்ப அட்டைகள் இருந்தாலும் அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, விரைவில் அங்கு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

**திரு. ஒய். பிரகாஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் ஒன்றியம், பேரண்டபள்ளி ஊராட்சி, பத்தலப்பள்ளி கிராமத்தில் செயல்பட்டுவரும் பகுதிநேர நியாய விலைக் கடையில் 1,600 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தக் கிராமத்திற்கு அருகில், ஒரு கிலோ மீட்டர் தொலைவில் பாஸ்கர்தாஸ் நகர் உள்ளது. அங்கே 500 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தப் பகுதி மக்கள் ரேஷன் பொருட்களை வாங்க வேண்டுமென்றால், தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, பாஸ்கர்தாஸ் நகரில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே முன்வைத்த கோரிக்கையில் நியாயம் இருந்தது. அதனை உணர்ந்து, அதற்கான அனுமதி வழங்கி, அங்கு நியாய விலைக் கடை அமைக்கப்படும் என்று இப்போது வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது. எப்போதுமே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நியாயமான கேள்வியைத்தான் வைப்பார்கள். அதேபோல, இதிலும் நியாயம் இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

**திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கச்சிராயன்பட்டி ஊராட்சி, மாங்குலப்பட்டி கிராமத்திலும், வனப்பச்சேரி ஊராட்சி, காரியேந்தல்பட்டி கிராமத்திலும், கம்பர் ஊராட்சி, சின்னகருப்பம்பட்டி கிராமத்திலும் பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்களுக்கு ஏற்கெனவே என்ன பதில் வழங்கப்பட்டதோ, அதே பதில்தான். அவர் ஆளுங்கட்சியைச் சார்ந்தவராக இருந்ததால் அந்தப் பதில் வழங்கப்பட்டது என்று நினைக்க வேண்டாம். எதிர்க்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினராக திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள் இருந்தாலும்கூட, அவர்களுடைய கோரிக்கையில் நியாயம் இருப்பின், இதுசம்பந்தமாக அவர்கள் முறையாக ஒரு கடிதம் தந்தார்களென்றால், நிச்சயமாக, துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பீமாரப்பட்டி என்கின்ற மலை கிராமத்தில் மலைவாழ் மக்களுக்காகப் புதிதாக ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தை மாண்புமிகு முத்தமிழறிஞர் அவர்கள் வழியில் ஆட்சி நடத்துகின்ற திராவிட மாடல் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்தார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு

*2024 பிப்ரவரி 22]*

*கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த ஆண்டே அதற்கான கட்டடம் கட்டித்தர முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே ஒரு கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கான நன்றியைத் தெரிவிக்கின்ற அதேவேளையில், உடனடியாக அந்தக் கட்டடம் கட்டித்தரப்படுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார். உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு அவர் கையிலேயே அதற்கான தீர்வு இருக்கிறது. அக்கட்டடத்தைச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டித்தர வேண்டும் அல்லது ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் வரக்கூடிய மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின்கீழ் செய்ய வேண்டும். குறிப்பாக, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரை, தற்போது ஏறத்தாழ 35,000 கடைகள் இருக்கின்றன. அந்த 35,000 கடைகளுக்கும் துறையின் சார்பில் கட்டடங்கள் கட்டுவது கடினமான ஒன்றுதான். ஆகவே, ஆங்காங்கு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதிகளைத் தந்து உதவுவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

**44—**

## கலை பண்பாட்டு மையம்

***21409—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

*மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*